2003 ஏப்ரல் 22]

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003).@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்". எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அக்டோபரிலும் 6 மாதம் நீட்டித்து இப்படி ஒரு சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம். அப்போதும் எங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தோம். இப்போது மீண்டும் அதை நீட்டித்து ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. 283 (ஏ) என்னும் பிரிவில் சில தவறுகளும், குறைகளும் இருக்கின்றன. மக்கள் வரி கட்ட மறுக்கிறார்கள். போராட்டம் நடக்கிறது. ஆகவே மனுக்கள் வரவில்லை. இப்போது கொண்டுவருகிற இந்தச் சட்டமுன்வடிவு 2002ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் நாள்; 8 நாட்களுக்கு ஒரு சட்டமுன்வடிவு; இப்போது ஏப்ரல் 22; என்ன விளைவை உருவாக்கும் என்பதைத் தயவுசெய்து இந்த அரசு ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முடித்துவிடட்டும்.

திரு. கே.சி. கருணாகரன்: ஏற்கெனவே மாநகராட்சிகளில் கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட நியதிகள் தவறானவை. 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதையும், ரிசர்வ்டு சைட்டுக்கு 10 சதவீதம் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் மாநகராட்சிகளில் இருக்கிற

@ 21-4-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் இலட்சக்கணக்கில் நிராகரித்து இருக்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்களால் கட்ட முடியாது. 5 செண்ட் இடத்தில் வீடு கட்டி இருக்கிறவர்கள், 80 ஆயிரத்திலிருந்து ஒன்றே கால் இலட்சம் ரூபாய் வரை கட்டணத்தைக் கட்டி முறைப்படுத்திக்கொள்வது என்பது நீங்கள் எத்தனை முறை திருத்தம் கொண்டுவந்தாலும் சாத்தியமல்ல. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் ஆட்சேபித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிடுகிறேன். மனைப் பிரிவு, கட்டடங்கள் வரன்முறைப்படுத்துவதற்கான இந்தச் சட்டத் திருத்தம் என்பது, வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களாலே ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குச் சுமையாக இருக்கிற காரணத்தாலேதான், மனுக்களினுடைய எண்ணிக்கை வரவில்லை; ஆகவே, மனுக்களினுடைய எண்ணிக்கை வராத காரணத்தால், சட்டம் நீட்டிக்கப்படுகிறது என்பது பொருத்தமற்றதாக இருக்கிறது. ஆகவே, சட்டமுன்வடிவைத் திருத்தி மக்களைப் பாதிக்காத வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுத்தாலொழிய, மனுக்கள் வராது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தம் இப்போது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் ஒப்புதல் பெறாமலும், விதிகளுக்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், மனைப் பிரிவுகளையும் ஒரு வரன்முறைப்படுத்த வேண்டுமென்பதுதான் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை. எதிர்காலம், இன்னும் 20 ஆண்டு காலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், கோயம்புத்தூர் மாநகரம் மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட மாநகரமாக மாறும்; சுற்றுச்சூழல், சுகாதாரக் காற்றுடன் இருக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 22] [திரு. எம்.சி. சம்பத்]

வேண்டும்; அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருணாகரன் அவர்களுடைய சந்ததியினர் இட நெருக்கடி இல்லாமல் செல்ல வேண்டும் என்பதுதான் தமிழக அரசின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலையாய கொள்கை. அந்த அடிப்படையிலே, அத்தனை கட்டடங்களையும், மேம்படுத்தப்பட்ட மனைகளையும் வரன்முறைப்படுத்த வேண்டும்; சுற்றுச்சூழல் சுகாதாரக் காற்றுடன் இருக்க வேண்டும். இட நெருக்கடிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, 30-4-2003 வரை விண்ணப்பங்கள் பெற்றுப் பரிசீலிக்கலாம் என்றும், இறுதி ஆணைக்குப்பின் அரசு முடிவு எடுக்கலாம் என்றும், உயர் நீதிமன்றம் கூறியுள்ளதால், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின், இது குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகராட்சி மக்களுக்கு, தொலைநோக்குப் பார்வையில், அவர்கள் சுற்றுச்சூழலுடன் இருக்க வேண்டும், இட நெருக்கடி தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையில் வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகராமைப்பு மற்றும் ஊராமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-4-2003) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS